பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 02 2025 — 7 15
புதன்கிழமை — காலை

தலைப்புச் செய்திகள்-

1. இந்தியா – கத்தார் இடையேயான நட்புறவு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. குஜராத் மாநில உள்ளாட்சி தேர்தலில் பிஜேபி-க்கு கிடைத்துள்ள வெற்றி வளர்ச்சிப் பணிகளுக்கான வெற்றி என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
3. ஏற்றுமதியாளர்களின் நலனை உறுதி செய்வதற்கான திட்டங்களை மத்திய அரசு வகுத்து வருவதாக வர்த்தக தொழில்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.
4. தில்லி சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.
5. ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டிகள் சீனாவின் **Shenzhen** –யில் இன்று தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

இந்தியா – கத்தார் இடையேயான நட்புறவு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று தம்மை சந்தித்த அந்நாட்டின் மன்னர் ஷேக் தமிம் பின் ஹமத் அல்-தானியை வரவேற்று பேசிய அவர், மேற்காசியாவில் இந்தியாவுடன் வர்த்தக மற்றும் கலாச்சார உறவுகளைக் கொண்ட வலுவான நாடாக கத்தார் திகழ்கிறது என்றார்.

வர்த்தகம், முதலீடு, உணவு பாதுகாப்பு, சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் எரிசக்தி துறைகளில் இரு நாடுகளும் நம்பத்தகுந்த கூட்டாளிகளாக திகழ்கின்றன என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

கத்தார் மன்னருக்கு குடியரசுத் தலைவர் நேற்று இரவு விருந்து அளித்து கௌரவித்தார்.

முன்னதாக கத்தார் மன்னரை குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா உள்ளிட்டோர் சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின்போது சுகாதாரம் மற்றும் மருந்து தயாரிப்பு தொழில் துறைகளில் இந்தியாவும் -கத்தாரும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து கத்தார் அதிபரிடம் திரு ஜெ பி நட்டா எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

குஜராத் மாநில உள்ளாட்சி தேர்தலில் பிஜேபி அமோக வெற்றி பெற்றுள்ளது.

அம்மாநிலத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு கடந்த 16-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதில் ஜூனாகத் மாநகராட்சியை பிஜேபி கைப்பற்றியுள்ளது.

மொத்தம் உள்ள 68 நகராட்சிகளில் 60 நகராட்சிகளிலும், மூன்று தாலுகா பஞ்சாயத்துகளிலும் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது.

இரண்டு நகராட்சிகளில் சமாஜ்வாதி கட்சியும், ஒரு நகராட்சியில் காங்கிரஸும் வெற்றிபெற்றுள்ளன.

இந்த வெற்றி குறித்து சமூக வலைதளப்பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள பிரதமா் திரு நரேந்திரமோடி, குஜராத் உள்ளாட்சி தேர்தலில் பிஜேபி-க்கு கிடைத்துள்ள வெற்றி வளா்ச்சிப் பணிகளுக்கான வெற்றி என குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேர்தலில் பிஜேபிக்கு முழுமையான ஆதரவு வழங்கியதற்காக குஜராத் மக்களுக்கும், தேர்தல் பணியாற்றிய பிஜேபி தொண்டர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேவைக்கு அண்மையில் நடந்த தேர்தலில் பிஜேபி 48 தொகுதிகளில் வெற்றிபெற்று 27 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சியை கைப்பற்றியது.

இதையடுத்து புதிய முதலமைச்சரை தேர்வு செய்வதற்காக அக்கட்சியின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

கட்சியின் மேலிட தலைவர்கள் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சட்டமன்ற கட்சித் தலைவர் தேர்வு செய்யப்பட்டதும், முறைப்படி துணை நிலை ஆளுநரை சந்தித்து புதிய ஆட்சி அமைக்க பிஜேபி உரிமை கோரும்.

புதிய முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு விழா தில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளதாக பிஜேபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[]<<<>>>[]

புதுதில்லி மௌசம்பவனில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி சுவர் ஓவிய அருங்காட்சியகத்தை மத்திய புவி அறிவியல் துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் நேற்று திறந்து வைத்தார்.

இந்திய வானிலை ஆய்வுத்துறையின் 150-வது ஆண்டுவிழாவை குறிக்கும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.,

மௌசம் பவனின் சுற்றுச்சுவரில் வரையப்பட்டுள்ள இந்த கலை நயமிக்க ஓவியங்கள் இந்தியாவின் வானிலை ஆய்வு வரலாற்று சிறப்புகளை எடுத்துரைப்பதாக உள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு ஜிதேந்திரசிங், வானிலை குறித்த துல்லியமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதன் மூலம் நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் வானிலை ஆய்வு மையம் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறினார்.

வானிலை குறித்த ஆராய்ச்சியிலும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதிலும் இந்திய வானிலை ஆய்வு மையம் முன்னிலையில் இருப்பதாக திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஏற்றுமதியாளர்களின் நலனை உறுதி செய்வதற்கான திட்டங்களை மத்திய அரசு வகுத்து வருவதாக வர்த்தக தொழில்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பொறியியல் ஏற்றுமதி அபிவிருத்தி கவுன்சில் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய விருதுகள் மற்றும் தர விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

இந்தியாவின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், மேலும் பல நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அஸ்ஸாம் மாநிலம் **Jogighopa** பகுதியில் பிரம்மபுத்ரா ஆற்றங்கரையில் இரண்டாவது நீர்வழி போக்குவரத்து நிலையம் தொடங்கப்பட்டிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய துறை முகங்கள் மற்றும் நீர்வழி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், பூட்டான் நிதி அமைச்சருடன் இணைந்து இந்த முனையத்தை திறந்து வைத்திருப்பதை பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அதிநவீன நீர்வழி போக்குவரத்து முனையம் பல்வகை சரக்குப் போக்குவரத்து பூங்காவாக திகழும் என குறிப்பிட்டுள்ள பிரதமர், வடகிழக்கு பிராந்தியத்தின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு உள்நாட்டு நீர்வழி கட்டமைப்புகளையும் நவீனப்படுத்த வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நீர்வழி முனையத்திலிருந்து பூட்டான் மற்றும் பங்ளாதேஷ் நாடுகளுக்கும், குவாஹாத்திக்கும் சரக்குகளை குறைந்த செலவில் அதிக அளவில் கொண்டு செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் சரக்குப் போக்குவரத்தை இந்த நீர்வழி முனையம் அதிகரிக்க உதவிடும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவிற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இம்மாதம் 26-ஆம் தேதி கும்பமேளா நிறைவு நாளான சிவராத்திரி தினத்தன்று அதிக அளவில் பக்தர்கள் வரக்கூடும் என்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

மக்கள் ஒரே நேரத்தில் அதிக அளவில் கூடுவதை தவிர்க்க முக்கியமான இடங்களில் கூடுதல் காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக கும்பமேளாவுக்கான சிறப்பு டி ஐ ஜி திரு வைபவ் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் பிரயாக்ராஜ் நகரில் வாகனங்கள் சுமூகமாக சென்றுவர போக்குவரத்து மாற்றங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.,

இதனிடையே கும்பமேளா நீட்டிக்கப்படும் என வெளியான தகவல்களை உத்திரபிரதேச மாநில அரசு மறுத்துள்ளது.

சமூக ஊடகங்களில் பரவும் தகவல் முற்றிலும் தவறானது என்றும், அது வெறும் வதந்தியே என்றும் பிரயாக்ராஜ் மாவட்ட ஆட்சியர் திரு ரவீந்திர மாந்தாத் கூறியுள்ளார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**[]<<<>>>[]**

நாட்டின் நகர் பகுதிகளில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளதாக மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலாண்டில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் 50 புள்ளி நான்கு சதவீதம் பேர் வேலைவாய்ப்பு பெற்றிருப்பதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறாதவர்களின் எண்ணிக்கை ஆறு புள்ளி நான்கு சதவீதமாக குறைந்துள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

சுதந்திரப் போராட்ட வீரர், வீர் சாவர்கர் குறித்து அவதூறான கருத்துக்களை தெரிவித்ததாகக் கூறிய தொடரப்பட்ட வழக்கில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்து புனே நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் அவருக்கு ஏற்கனவே ஜாமீன் வழங்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு அவர் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டிகள் சீனாவின் **Shenzhen** –யில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர்களான சரத்கமல், மனவ் தக்கர், ஹர்மித் தேசாய், ஸ்ரீஜா அகுலா, யஸ்யஸ் வினி கோர்படே உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டம் கராச்சியில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டியில் பாகிஸ்தான் - நியுசிலாந்து அணியை எதிர்கொள்கிறது.

பிற்பகல் இரண்டரை மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

துபாயில் நாளை நடைபெறும் போட்டியில் இந்தியா – பங்ளாதேஷை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 120 ரன் எடுத்தது.

121 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 16 புள்ளி ஒரு ஓவரிலேயே ஐந்து விக்கெட் இழப்புக்கு 122 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

புரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனி அணியிடம் ஒன்று – நான்கு என்ற கோல் கணக்கில் வெற்றி வாய்ப்பை இழந்தது.

மகளிர் பிரிவிலும் இந்தியா அணி, ஸ்பெயிடம் மூன்று – நான்கு என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

***End of News***